1968 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : செங்கல்பட்டு மாவட்டத்தில்தான் அதிகம் ஏற்பட்டது என்பது உண்மை. சென்னையில் இருந்து காரில் போகிறபோதே, பெரிய பெரிய பங்களாக்கள், ஏர் கண்டிஷன் கட்டடங்கள் இந்தப் பண்ணைகளுக்காகக் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்துத்தான் கேட்கிறார்கள். தீவிரத் திட்டம், அதி தீவிரத் திட்டம் என்றெல்லாம் இங்கே அதிகம் ஏற்படுத்தப்பட்டதற்கான காரணம் கனம் உறுப்பினருக்கு நான் சொல்லாமலேயே தெரியும்.

திரு. என். துரைபாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை இவற்றின் மூலமாக அரசாங்கத்திற்கு சிறிது நஷ்டம் என்றாலும் இன அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்ற முறையில் நடைபெறுகிறது என்கிறபோது நாங்குநேரியில் அமைக்கப்பட்ட பண்ணையை திடீரென்று மாற்றிவிட்டார்களே, ஏன் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனிக் கேள்வி போட்டால், முழு விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, இங்கிலாந்து நாட்டில் (Bernha d) என்ற குமஸ்தா 1956-ஆம் ஆண்டில் 50 ரூபாய் மூலதனத்தில் ஆரம்பித்த கோழிப்பண்ணை இன்றைக்கு 30 கோடி ரூபாய் மூலதனத்தில் இயங்குகின்ற நிலைக்குப் பெருகியிருக்கிறது. அதன் நுட்பங்கள் என்ன என்பதைத் தெரிந்து வருவதற்கு—நமக்கு ஏற்படும் 50 லட்சம் ரூபாய் நட்டத்தைத் தவிர்ப்பதற்கு ஒரு நிபுணரையாவது அங்கே அனுப்பி வைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் இது பற்றிய விவரத்தை முழுமையாக எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

வடார்க்காடு மாவட்ட விநியோக மார்க்கெட்டிங் சொசைட்டி

***67 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி** : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்ட விநியோக மார்க்கெட்டிங் சொசைட்டி, 1964-65 முதல் இன்றுவரை சிவில் சப்ளை இலாகாவில் இருந்து வாங்கிய கோதுமை, சர்க்கரை, மைதா, ரவை முதலிய உணவுப் பண்டங்களுக்காக கொடுக்கப்பட வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு, வருடவாரியாக?

(இ) பாக்கித் தொகை கொடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) பாக்கி ஒன்றும் கிடையாது.

(இ) இக் கேள்வி எழவில்லை.

[1968 பிப்ரவரி 17

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஆனால் அந்த சொஸைடியில் சிவில் சப்ளை இருந்தும் சர்க்கரையோ, கோதுமையோ எடுக்காமல் இருக்கிறார்களே—இரண்டு மாதங்களுக்கு முன்பு. பாக்கி இல்லை என்றால் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பாக்கித் தொகை எவ்வளவு என்பது கேள்வி. இல்லை என்பது பதில். எடுக்காமல் இருந்தால், அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : வடார்க்காடு மார்க்கெட்டிங் கமிட்டி பற்றி ஏதேனும் புகார் வந்திருக்கிறதா? அதன்மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை என்ன என்று அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தகவல் இல்லை.

நூ ப 10-00 **மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வட ஆர்க்காடு மாவட்ட விநியோக மார்க்கெட்டிங் சொசைடியில் கோதுமை, சர்க்கரை, மைதா, ரவை இவற்றிற்காகக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையைப்பற்றி திரு. பலராமன் அவர்கள் ஒரு துணை வினா கேட்பார்கள்.

திரு. இல. பலராமன்: வட ஆர்க்காடு கூட்டுறவுச் சங்கம் நல்ல முறையில் நடந்துவருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? நல்ல முறையில் மக்களுக்குத் தேவையான பொருள்கள் விநியோகிக்கப் படுகின்றன என்பதைப்பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்து. அரசாங்கத்திற்கு அதைப்பற்றி கருத்து இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வட ஆர்க்காடு மாவட்ட விநியோக மார்க்கெட்டிங் சொசைடியில் பாக்கியைப்பற்றி மட்டும் திரு. கோதண்டராமன் அவர்கள் ஒரு துணை வினா எழுப்புவார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த வட ஆர்க்காடு விநியோக மார்க்கெட்டிங் சொசைடி நல்லவிதமாக நடப்பதாக இப்பொழுது அங்கத்தினர் அவர்களால் சொல்லப்பட்டது. 1964-65-ஆம் ஆண்டு முதல் பல லட்சக்கணக்கான ரூபாய் ஊழல் ஏற்பட்டு அந்த ஆண்டு முதல் கணக்குகளைத் தணிக்கை செய்யாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது, என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா? ஆகவே அப்படிப்பட்ட ஊழல்களைப் போக்கக்கூடிய முறையிலே உடனடியாகக் கணக்குகளைத் தணிக்கை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THIRU. K. VINAYAKAM : Sir, on a point of order. The Hon. Minister has stated that there are no dues from the society. So, is the hon. Member objecting to that statement or suspecting the *bona fides* of the Hon. Minister. Let him make it clear.

1968 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட அமைச்சர் அவர்கள் விரும்பினால், இதற்குப் பதில் சொல்லலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தக் கேள்விக்கு அப்பாற்பட்ட உண்மையை மறைக்கக்கூடிய தன்மையில் நியாயமாக நேர்மையாக நடக்கிறது என்று அங்கத்தினர் சொன்ன காரணத்தினால்தான், நான் நேர்மையற்ற தன்மையில் அது நடக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துக்கூறக்கூடிய தன்மையில்தான் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பாக்கி இருக்கிறதா என்பது கேள்வி. இல்லை என்பது பதில். ஊழலாக இருக்கிறது என்று பொதுவாகச் சொல்வது நல்லதல்ல. அப்படிப்பட்ட தவறு நடந்திருக்கிறது என்பதுபற்றி தகவல் எழுதியனுப்பினால், அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

பழம் பதனிடும் தொழிற்சாலை

*68 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் பழம் பதனிடும் தொழிற்சாலை நிறுவுவதற்கென கடனுகை வழங்கப்பட்ட தொகை என்ன?

(இ) தற்போது எந்த அளவுக்கு அத்தொழிற்சாலை செயல்படத் தொடங்கியுள்ளது?

(உ) அதனிடமிருந்து மேலும் கடன் கோரி விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) பழம் பதனிடும் தொழிற்சாலை நிறுவுவதற்காக, அரசாங்கம் வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கத்திற்கு ரூ. 2,83,700 மூலதனப் பங்குத் தொகையோடு ரூ. 5,67,400 கடனுகையும் வழங்கியுள்ளது.

(இ) இத் தொழிற்சாலை இன்னும் உற்பத்தியைத் தொடங்கவில்லை.

(உ) இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அந்தத் தொழிற்சாலைக்கு இடங்கள் வாங்கப்பட்டது, எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது? அது சம்பந்தப்பட்ட பத்திரம் முதலியவற்றை அரசாங்கம் பரிசீலித்ததா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த இடம் மட்டும் 1,22,566 ரூபாய். அந்த இடத்திற்குப் பத்திரத்தையும் பார்த்தாகிவிட்டது. கனம் அங்கத்தினர் சொல்கிறபடி தவறுகள் இருக்கின்றன என்ற தகவல்கள் இருக்குமானால், அதை எழுதியனுப்பலாம்.